**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

WITH COURAGE AND FAITH

**(எச் - பிரிவு)**

H7/**SCH/2021** **நாள்: 02.09.2021**

**சுற்றறிக்கை**

**பொருள்:** ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறிஸ்தவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் 2020-2021 கல்வி ஆண்டில் கற்பிப்புக் கட்டணம் (Tuition Fees) பெறுவதற்கு 92TNER(E-Card) படிவத்தை சமர்ப்பிப்பது - தொடர்பாக.

--------------

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 2020-2021 ஆம் ஆண்டிற்குரிய அனைத்து துறைகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறிஸ்தவ ஆதிதிராவிடர் SC/ST / SCCC மாணாக்கர்கள் கற்பிப்பு கட்டணம் 92TNER(E-Card) படிவத்தை “H” பிரிவில் பெற்று பூர்த்தி செய்து “H” பிரிவிலேயே சமர்ப்பித்து அதற்குரிய கற்பிப்புக் கட்டண சலுகையை பெறுமாறு அறிவுறுத்தப்படுகிறது. கற்பிப்புக் கட்டணத்தை முன்பே இணையதள வழியோ அல்லது வேறு வழியிலோ கற்பிப்புக் கட்டணம் (Tuition Fees) செலுத்திய மாணாக்கர்களும் மேற்குறிப்பிட்டுள்ள 92TNER(E-Card) படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்தால்தான் கற்பிப்புக் கட்டண சலுகைகளை அரசிடமிருந்து பெற இயலும் என்பதையும் தெரிவிக்கப்படுகிறது. 92TNER(E-Card) உரிய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை “H” பிரிவில் தொடர்புடைய அலுவலரிடம் 08.09.2021-க்குள் சமர்ப்பிக்க கோரப்படுகிறது. 08.09.2021-க்குப் பிறகு 92TNER(E-Card) படிவம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2/9/21

பதிவாளர் (பொ)

02/9/2021

**பெறுதல்:**

1. அனைத்து புலமுதல்வர்கள்
2. அனைத்து துறைத் தலைவர்கள்
   இச்சுற்றறிக்கையினை அனைத்து மாணாக்கர்களுக்கு வகுப்புகளில் தெரிவிக்க கோரப்படுகிறது.
3. விடுதி ஒருங்கிணைப்பாளர்
4. அனைத்து விடுதி காப்பாளர்கள்
5. சுற்றறிக்கையை அறிவிப்பு பலகை வாயிலாக மாணவ / மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்தப்படுகிறது.
6. ‘D1’ பிரிவு

**நகல்:**

1. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அலுவலகக் கோப்பு